முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி! அருட்பெருஞ்சோதி!! தனிப்பெருங்கருணை! அருட்பெருஞ்சோதி!!

**எதிர்காலம் குறித்த**

**இந்தியா, தமிழகத்தில் இந்த வார நிகழ்வு குறித்த**

**மகான் சுப்பிரமணியரின் ஆசி நூல்**

**(விளம்பி மார்கழி மாதம் 8ம் திகதி முதல் மார்கழி மாதம் 15ம் திகதி வரை**

**டிசம்பர் 23ம் திகதி முதல் டிசம்பர் 30ம் திகதி வரை)**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

1. **அமுத ஞானமொழி கொண்ட தமிழகமே**
   **அருள்மலைகள் செறிந்த பரதமே**
   **அமுதனே குமுதனே என தெய்வீகம்**
   **ஆற்றலாக இறைவன் பலமிகுந்த**
2. **மிகுந்தநல் இந்தியா தமிழகம் தன்னில்**
   **மொழிகுவேன் விளம்பி சிலை திங்களில்**
   **தகுந்த அட்டம திகதி மேல் மூவை திகதிவரை**
   **(விளம்பி வருடம் மார்கழி மாதம் 8ம் நாள் 23.12.2018, ஞாயிறு முதல் மார்கழி மாதம் 15ம் நாள் 30.12.2018, ஞாயிறு முடிய)**
   **தக்க வார நிகழ்வாக எதிர்கால பலனை**
3. **பலனை வார ஆசி நூலாக**
   **பகருவேன் சுப்பிரமணியர் யானும்**
   **காலமதில் அரங்க ஞானி கேட்க**
   **காது கொடுத்து மக்களின் நலம்**
4. **நலம் கேட்கா பாதுகாப்பு தராத**
   **ஞானமில்லா தொண்டு ஆளுமை**
   **பலமில்லா கீழும் மேலுமாக வீழும்**
   **பண்பில்லாத சட்ட திட்டங்கள்**
5. **திட்டங்களில் ஜீவ தயவில்லை எனில்**
   **தெரியுமிடம் அறியா ஒழியும்**
   **மட்டமாக மக்களை மாண்புகளை**
   **மதியாத மன்னர்கள் மண்ணுலகில்**
6. **மண்ணுலகில் மாபதவிகளை இழந்தும்**
   **மறுமை பல கண்டும் தவிப்பரே**
   **தேடி வந்த பதவி செல்வத்தை**
   **தொண்டாக்கி உண்மை சேவைபட**
7. **சேவைபட தருமமாக்கி யுகத்தில்**
   **செயலாக்கி வாழும் ஆளுமையே**
   **புவியதனில் நிலைத்து நின்று**
   **புண்ணியமோடு வரலாறு படைக்கும்**
8. **படைப்பில்லா மக்களின் மேல் வரி**
   **பாதகமுற வாழ்வாதாரம் காக்கா**
   **இடரான ஆளுமை பெருகினால்**
   **இந்தியா தமிழகம் தன் பலமிழந்து**

9. பலமிழந்து பசுமை வளமுமிழந்து
பாருலகில் வளரா தேச வரிசையில்
வலம் வர நேரும் வறுமை மிஞ்சிட
வகிக்கும் பதவி காலமே அன்னதனால்

10. அன்னதனால் சமத்துவ சமதர்ம
அனைவரும் சமம் எனும் உணர்வுபட
மண்ணுலகில் ஆளுமை பெருக்கிட
மத்தியும் மாநிலமும் மேம்பட்டு

11. மேம்பட்டு ஞானவான்கள் துணைபட
முன்னேற்றம் வளர்ச்சி காணும்
நம்பகமான சூழல்கள் பெருகி
நாடெங்கும் தருமம் வளர்ந்திட

12. வளர்ந்திட இயற்கை பேரிடராக
வந்திடா பாதுகாப்பு கூடும்
வளர்ந்திட கழனிக்கு காப்பு
வல்லமை கூட்டிட பஞ்சம் பசி இல்லா

13. இல்லா வளர்ந்து நாடுகளுமாக
இந்தியாக தமிழகம் நிலை உயரும்
வல்லமை கூடி என் சக்தியாக
வந்த துறையூர் வாழ் அரங்க ஞானி

14. ஞானியர் தரும பலம் ஏற்றிட
ஞானபூமியாக செழுமை கண்டு
வானவர் துணைபட வளம் கூடும்
வல்லமை பெறும் இந்தியா தமிழகம் வார ஆசி முற்றே.

–சுபம்–

முருகப்பெருமான் துணை

**மகான் சுப்பிரமணியர் அருளிய வார ஆசி நூலின் சாரம் :**

**விளம்பி வருடம் மார்கழி மாதம் 8ம் நாள் 23.12.2018, ஞாயிறு முதல் மார்கழி மாதம் 15ம் நாள் 30.12.2018, ஞாயிறு முடிய உள்ள ஒரு வார காலத்தில் நடக்க இருக்கும் நிகழ்வுகள்**

அமிழ்தினும் இனிமை உடைய ஞானமொழியாகிய தமிழை தாய்மொழியாகக் கொண்ட ஞானபூமி தமிழகத்திலும் அருள் மலைகள் அதிகமாக உள்ள புனித பூமியாக பாரத தேசத்திலும் அமுதனே குமுதனே என்றே அற்புதமான தெய்வீக சக்திகள் மிகுந்து மாபெரும் அருள் ஆற்றலாக இறைவனது பலம் மிகுந்த இந்த இந்திய தமிழக தேசங்களிலே விளம்பி வருடம் மார்கழி மாதம் 8ம் நாள் 23.12.2018, ஞாயிறு முதல் மார்கழி மாதம் 15ம் நாள் 30.12.2018, ஞாயிறு முடிய உள்ள ஒரு வார காலத்தில் நிகழவிருக்கும் நிகழ்வுகளை வார ஆசி நூலாக சுப்பிரமணியர் யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் சுப்பிரமணியராகிய முருகப்பெருமான்.

நாட்டினில் உள்ள மக்களின் குறைகளை, அவலங்களை காது கொடுத்தும் கேளாமல் தாம் ஆளும் மக்களின் நலனில் அக்கறை கொள்ளாமல் மக்களுக்கு பாதுகாப்பு தராமல் தன்னாட்சியாக ஆட்சி செய்கிறவர்கள் பலம் இழந்து ஆட்சி பொறுப்பிலிருந்து வீழும் நிலை உருவாகும்.

மக்களின் நலம் கருதாத பண்பில்லா சட்டங்கள் திட்டங்கள் எல்லாவற்றிலும் மக்கள் நலனினை கருத்தில் கொண்டு செயல்படுத்தப்பட வேண்டும், சட்டத்திட்டங்களில் ஜீவதயவு

இல்லையெனில், ஜீவதயவற்ற சட்டத்திட்டங்களை செய்தவர்கள் இருக்கும் இடம் தெரியாமல் மறைந்திட நேர்ந்திடும்.

நாட்டு மக்களை மதியாமல் தாழ்வாக எண்ணி மக்களின் மாண்புகளை மதிக்காமல் ஆட்சிபுரிவோர் தாம் வகிக்கின்ற பெரும் பதவிகளை இழப்பதோடு அதன் பாவச்சுமையினால் பல பிறவிகளில் துன்பங்களை அனுபவிக்க நேர்ந்திடுமப்பா. தம்மைத் தேடி வந்த பதவியானது இறைவனது கருணையால் கிடைத்திட்ட செல்வமாக எண்ணி அதை மக்களுக்கு நல்லது செய்கின்ற நோக்கிலே தொண்டாக செய்து மக்களிடத்து உண்மையுடன் சேவை மனப்பான்மையுடன் நடந்து கொள்ள வேண்டும். தாம் பெற்ற செல்வங்களை கடவுளால் கொடுக்கப்பட்ட செல்வமாக எண்ணி தர்மமாக்கி மக்களுக்கு அளித்து வாழ்கின்ற ஆட்சியாளர்களே இப்புவியில் நிலைத்து நின்று புண்ணியவான்களாக வரலாறு படைக்கின்றவர்களாக ஆகிடுவர். அவர்கள் ஆட்சி செய்யும் நாடும் வரலாறு படைக்கும்.

அதைவிடுத்து மக்களின் மீது தயவின்றி வரிமேல் வரி விதிப்பதுடன் மக்களின் வாழ்வாதாரம் பாதிக்கும்படியாக நடந்து மக்களுக்கு பாதுகாப்பற்ற சூழ்நிலையை உருவாக்கி மக்களை காப்பாற்றாமல் மக்களுக்கு துன்பம் தரும் வகையினில் ஆட்சி செய்திட்டால் இந்திய தேசமும் தமிழகமும் தமது பெருமைகளையும் பலத்தையும் இழந்து நாட்டின் வளம் குன்றி பசுமை இழந்து இவ்வுலகினில் முன்னேறாத நாடுகளின் வரிசையில் இடம் பெற நேரிடும். நாட்டினில் வறுமை மிதமிஞ்சி தாண்டவம் ஆடும்.

ஆதலினால் தாம் பதவியில் இருக்கும் காலத்திலேயே தமது நிலையை உணர்ந்து நாட்டினில் உள்ளோர் அனைவரும் சமம் என்று எண்ணி சமத்துவ சமதர்ம உணர்வுடன் ஆட்சி செய்திட மத்திய அரசும் மாநில அரசுகளும் மேம்பாடுகளை அடைந்து நாட்டினில் உள்ள ஞானவான்களின் துணைபட நாடு நல்ல முன்னேற்றத்தையும் வளர்ச்சியையும் காணும். நாட்டினில் நம்பகம் மிக்க சூழ்நிலைகள் உருவாகி நாடெங்கும் தர்மம் பெருகி தர்மதேசமாக நாடு ஆகிடும்.

நாடெங்கும் தருமம் பெருக பெருக, தர்மபலம் பெருகுவதினால் தர்மத்தின் சாட்சியான இயற்கையும் தமது கோபம் தணிந்து இயற்கை பேரிடர்களாக வராமல் தணிந்து மக்களுக்கு பாதுகாப்பாய் மாறிடும்.

தருமம் வளரவளர விவசாயிகளுக்கும் விவசாயத்திற்கும் பாதுகாப்பு அதிகமாகும். விவசாயிகள் வல்லமையுடன் செயல்பட்டு நாட்டின் உணவு ஆதாரத்தை பெருக்கிட நாட்டினில் பசி, பட்டினி, பஞ்சம் இல்லாத வளர்ச்சி அடைந்த நாடாக இந்தியாவும் தமிழகமும் நிலை உயர்ந்திடும்.

வல்லமைமிக்க முருகப்பெருமான் எமது சக்தி வடிவமாக வந்திட்ட துறையூர் வாழ் ஆறுமுக அரங்கமகா தேசிக ஞானயோகியரின் தருமபலத்தினை வளர்த்திட வளர்த்திட தருமபலம் பெருகி இவ்வுலகம் ஞானபூமியாக செழுமைமிக்க பூமியாக மாறி ஞானிகள் துணையுடன் சர்வ வளமும் பெற்று சிறக்கும், சர்வவல்லமை பெற்று நிலை உயர்ந்திடும் என தமது வார ஆசி நூல் மூலம் கூறுகிறார் மகான் சுப்பிரமணியராகிய முருகப்பெருமான்.

–சுபம்–